# தாம்பரம் - வேளச்சேரி இடையே மெட்ரோ ரயில்: ஆளுநர் உரையில் தகவல்

சென்னை, ஜன. 6: தாம்பரம் - வேளச்சேரி வழித்தடத்தில் 15.5 கிலோமீட்டர் நீளத்துக்கு மெட்ரோ ரயில் போக்குவரத்து அமைக்க திட்ட அறிக்கை தயாரிக்கப்படும் என்று ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஆளுநர் உரையில் கூறியிருப்பது:மெட்ரோ ரயில் சென்னை மாநகருக்குப் பெருமை சேர்க்கிறது. 45 கிலோ மீட்டர் நீளத்துக்கான சென்னை மெட்ரோ ரயிலின் முதல் கட்டம் முழுமையாக முடிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. திருவொற்றியூர் - விம்கோ நகர் வரையிலான முதல்கட்டத்தின் நீட்டிப்புப் பணிகள் 2020-ஆம் ஆண்டின் மத்தியில் நிறைவடையும். ரூ.69,180 கோடி செலவில் 118.9 கிலோ மீட்டர் நீளத்துக்கு மூன்று வழித்தடங்களை அமைக்கும் இரண்டாம் கட்ட திட்டப் பணிகளைச் செயல்படுத்த அரசு ஏற்கெனவே ஒப்புதல் அளித்துள்ளது.

இரண்டாம் கட்டப் பணியில் 52.01 கிலோ மீட்டர் நீளத்துக்கு நிதியுதவி அளிக்க ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை ஒப்புதல் அளித்து, முதல் தவணைக்கான கடன் ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

இரண்டாம் கட்டத்தின் மீதமுள்ள வழித்தடங்களுக்காக ஆசிய வளர்ச்சி வங்கி, ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி, புதிய வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் மூலம் பன்னாட்டு நிதியுதவி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதல்கட்டத்தில் 50 சதவீத பங்குமூலதனத் தொகையை மத்திய அரசு வழங்கியதைப் போலவே, இரண்டாம் கட்டத் திட்டத்திலும் 50 சதவீதம் பங்களிப்புக்கான ஒப்புதலை விரைவில் வழங்க வேண்டும்.

சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் சென்னை விமான நிலையத்திலிருந்து, புதிய புறநகர் பேருந்து நிலையம் அமையவிருக்கும் கிளாம்பாக்கம் வரையிலான 15.3 கிலோ மீட்டர் தூரத்துக்கு, மெட்ரோ ரயில் வழித்தடத்தை நீட்டிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. தாம்பரம் - வேளச்சேரி வழித்தடத்தில் ஏற்படும் அதிகமான போக்குவரத்து நெரிசலைச் சமாளிப்பதற்கு 15.5 கிலோ மீட்டர் நீளத்துக்கு மெட்ரோ ரயில் போக்குவரத்து முறை ஒன்றினை அரசு அமைக்கும்.

இதற்கான விரிவான சாத்தியக்கூறு மற்றும் திட்ட அறிக்கை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் தயாரிக்கும் என்று கூறப்பட்டுள்ளது.